**சார்பு நீதிமன்றம், திட்டக்குடி.**

**முன்னிலை : திரு.என்.விஸ்வநாத், பி.ஏ., பி.எல்., எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,**

**சார்பு நீதிபதி, திட்டக்குடி.**

**2026-ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 28-ஆம் நாள் செவ்வாய் கிழமை**

மேல்முறையீட்டு வழக்கு எண்.8/2024

விஜயா ... மேல்முறையீட்டாளர்/வாதி

.. எதிர் ..

1. கோவிந்தசாமி
2. கொளஞ்சி
3. ராதாகிருஷ்ணன்
4. முருகேசன்
5. கிராம நிர்வாக அலுவலர்,
   மங்களூர் கிராமம்.
6. வருவாய் ஆய்வாளர், மங்களூர் பிர்லா
7. வட்டாட்சியர் அலுவலகம், தற்சமயம் வேப்பூர்
8. கோட்டாட்சியர், விருத்தாசலம்
9. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.

... எதிர்மேல்முறையீட்டாளர்கள்/எதிர்வாதிகள்

கீழமை நீதிமன்றமான திட்டக்குடி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.202/2010 நாள் 29.02.2024-ல் ஏற்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு.

கீழமை நீதிமன்றத்தில்

அசல் வழக்கு எண்.202/2010

விஜயா ... வாதி

.. எதிர் ..

1. கோவிந்தசாமி
2. கொளஞ்சி
3. ராதாகிருஷ்ணன்
4. முருகேசன், கிராம பணியாளர்
5. கிராம நிர்வாக அலுவலர்,
   மங்களூர் கிராமம்.
6. வருவாய் ஆய்வாளர், மங்களூர் பிர்லா
7. வட்டாட்சியர் அலுவலகம், தற்சமயம் வேப்பூர்
8. கோட்டாட்சியர், விருத்தாசலம்
9. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர்.

... எதிர்வாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 06.07.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மேல்முறையீட்டாளருக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.நடராஜன் அவர்கள் ஆஜராகினார். 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.**ஸ்ரீ**நிவாசன் அவர்கள் ஆஜராகினார்**. 3-**ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டார்**.** 5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகினார். இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இவ்வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**தீர்ப்புரை**

அசல் வழக்கு எண்.202/2010 என்ற வழக்கில் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்து அப்பீல் வழக்கை அனுமதிக்க கோரியும், வழக்கு செலவுத் தொகை அப்பீல் எதிர்வாதியால் கிடைக்கக் கோரியும் மேல்முறையீட்டாளர்/வாதியால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்குரையின் சுருக்கம்**

2. வழக்குச்சொத்துக்கள் திட்டக்குடி தாலுக்கா, மங்களூர் கிராமத்தில் உள்ளது. வழக்குச்சொத்துக்கள் தரிசு ஆகும். வழக்குச்சொத்திற்கு தென்புறமும், கீழ்புறமும் பட்டா எண்.20 ல் வாதியின் கணவருக்குப் பாத்தியமான பட்டா நிலம் உள்ளது. வாதி அந்த பட்டா நிலத்தினைச் சேர்ந்தாற்போல் உள்ள வழக்குச்சொத்தை திருத்தி, செலவு செய்து தொடர்ச்சியாக சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக வாதியின் மாமியார் செல்லபாங்கியும் பின்னிட்டு வாதியும் அனுபோகம் செய்து வருகிறார்கள். வழக்குச்சொத்துக்களுக்கு சிவாஜினிமா ரசீது செலுத்தியுள்ளனர். வாதி தொடர்ச்சியாக தன்னுடைய குடும்ப பட்டா நிலத்தினைச் சேர்ந்தாற்போல் உள்ள வழக்குச்சொத்துக்களை தொடர்ச்சியாக அனுபோகம் செய்து வருவதால் வாதிக்கு வழக்குச்சொத்துக்களில் அனுபோக பாத்திய உரிமை சித்தித்துள்ளது.

3. வாதி, ஏற்கெனவே 12 எதிர்வாதிகள் மற்றும் அவர்களுடைய குமாரர்கள் மீது ஓ.எஸ்.284/2007 என்றெண்ணில் வழக்குத் தாக்கல் செய்து நடைபெற்று வரும்பொழுது 1, 2 எதிர்வாதிகள் வழக்குச்சொத்துக்களில் வாதியின் அனுபோகத்தை இடையூறு செய்யவில்லையென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கூறி வழக்கை கோர்ட்டுக்கு வெளியில் ராஜி செய்ததாக எழுதிக்கொடுக்கும்படி பஞ்சாயத்தார்கள் கூறியதன் பேரில் வாதியும் மெமோ தாக்கல் செய்து 26-10-2009 ல் கோர்ட்டுக்கு வெளியில் ராஜியாகிவிட்டதாக வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 1, 2 எதிர்வாதிகள் அதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 4 முதல் 9 எதிர்வாதிகள்

துணையுடன் வழக்குச்சொத்துக்களை தங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துகொள்ள முயற்சி செய்து வருகின்றார்கள். 4ம் எதிர்வாதி அதற்கு உடந்தையாக, தப்பான காரியங்களில் ஈடுபட்டு வாதி அனுபோகம் செய்வதை மறைத்து வாதியிடம் எவ்வித விசாரணையும் செய்யாமல் தப்பான ஆவணங்களை ஏற்படுத்த கடந்த 5-8-2010 முதல் முயற்சி செய்து வருகிறார்கள். அவ்வாறு செய்ய எதிர்வாதிகளுக்கு எவ்வித உரிமையும். அனுபோகமும் இல்லை. எதிர்வாதிகள் ஒன்றுகூடிகொண்டு வாதியின் அனுபோகத்தை இடையூறு செய்ய கடந்த 25-10-2010 முதல் முயற்சி செய்து வருவதாலும், 7 முதல் 9 எதிர்வாதிகள் 4 முதல் 6 எதிர்வாதிகளுக்கு உயர் அதிகாரிகள் என்பதால் அவர்களையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசம் இல்லாததால் 4 முதல் 9 எதிர்வாதிகளுக்கு சட்டப்படி அறிவிப்பு கொடுத்து வழக்குத் தாக்கல் செய்ய இயயவில்லையென்பதால் சிபிசி செக்ஷன் 80(2)ன் படி ஷை அறிவிப்பு கொடுப்பதை நீக்கரவு செய்து வழக்குத் தாக்கல் செய்ய அனுமதி கோரி மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் வழக்குச்சொத்துக்களை வாதி அமைதியாக அனுபோகம் செய்து வருவதை எதிர்வாதிகள் எவ்வகையிலும் இடையூறு செய்யாமலிருக்க நிலைக்கால உறுத்துக்கட்டளை கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்து 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப் பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**

4. வாதியின் வழக்கு சட்டபடியும், நியாயப்படியும் தவறானது. முதல் எடுப்பிலேயே தள்ளுபடிக்கு உரியது. வழக்குரைப்படி வாதிக்கு எந்த பரிகாரமும் கிடைப்பதற்கு இல்லை. வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை தானே நிருபிக்க கடமைப்பட்டவர். இதில் பிரதிவாதிகள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர பிறவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். வழக்கு சொத்துக்கள் மங்களூர் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்துக்கள் அரசுக்கு பாக்கியமான தரசு நிலங்களாகும் என்பது மட்டும் உண்மை வாதி வழக்கு

சொத்துக்களை தொடர்ச்சியாக அனுபோகம் செய்து வருவதாக கூறுவதும் அதில் தனக்கு அனுபோக பாத்திய உரிமை ஏற்பட்டுள்ளதாக கூறுவது பொய்யானதாகும்.

5. வாதி 2007 ஆம் ஆண்டு 1, 2 எதிர்வாதிகள் மற்றும் அவருடைய மகன்கள் மீதும் திட்டக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 284/2007 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்தார் என்பது மட்டும் உண்மை. அவ்வழக்கு காலத்தில் 1,2 எதிர்வாதிகள் வழக்கு சொத்துக்களில் வாதியின் அனுபோகத்தை இடையூறு செய்யவில்லை என்று பஞ்சாயத்தார் முன்னிலையில் கூறி வழக்கை நீதிமன்றத்திற்கு வெளியில் ராசி செய்ததாக எழுதி கொடுக்கும்படி பஞ்சாயத்தார்கள் கூறியதன் பேரில் வாதியும் மெமோ தாக்கல் செய்து 26.10.2009 ல் நீதிமன்றத்திற்கு வெளியில் ராசியாகிவிட்டதாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. என்பது சுத்த பொய்யாகும் அவ்வாறு 1,2 எதிர்வாதிகள் வாதிக்கோ பஞ்சாயத்தார்களுக்கோ எவ்வித உறுதிமொழியையும், ராசியையும் எழுதி கொடுக்கவில்லை உண்மையில் தோல்வி பயத்தினாலும் நீதிமன்ற ஆணையர் மூலம் தன் வழக்கை சரிவர நிரூபிக்க முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தினால் வாதி வழக்கை திரும்பபெற்றாரே ஒழிய தரப்பினர்களுக்கிடையே எவ்வித சமாதானமும் ஏற்படவில்லை என்பதே முதல் உண்மை. அவ்வழக்கில் அரசு தரப்பினரை சேர்க்காமல் வழக்கிட்டு விட்டு அக்குறையை சரிசெய்ய வேண்டியும் புதுவழக்கு தாக்கல் செய்ய வேண்டியுமே திரும்ப பெறபட்டதே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. தற்பொழுது 1,2 எதிர்வாதிகள் தங்களுக்கு எதிராக வழக்கு ஏதும் இல்லாத நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு நான்கு முதல் ஒன்பது எதிர்வாதிகள் துணையுடன் வழக்குச் சொத்துக்களை தங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொள்ள முயற்சி செய்து வருகிறார்கள் என்று கூறுவதும் பொய்யாகும். உண்மையில் வாதி அ.வ எண் 284/07 என்ற எண்ணில் தன் பட்டா நிலத்திற்குரிய ஆவணங்களை தன் தரப்படி ஆவணமாக தாக்கல் செய்திருந்தார். அப்பொழுது மங்களூர் கனரா வங்கியில் வாதி தன்பெயரில் விவசாய கடன் வாங்க அசல் பத்திரம் தேவைபட்ட காரணத்தால் வழக்கு வாதியால் திரும்ப பெறப்பட்டது என்பதே இரண்டாவது உண்மையான

காரணமாகும். வாதியின் கணவருக்கு உரிய பட்டா நிலத்தினை சேர்ந்தாற்போல் உள்ள வழக்கு சொத்தை பிறகு காலத்திலும் திருத்தி, செலவு செய்து அனுபவித்தது கிடையாது. நான்காம் எதிர்வாதியின் உடந்தையுடன் பிரதிவாதிகள் தப்பான காரியங்களில் ஈடுபட்டு வாதியின் அனுபோகத்தை மறைந்து வாதியிடம் எவ்வித விசாரணையும் செய்யாமல் தப்பான ஆவணங்களை ஏற்படுத்த 25.08.2010 முதல் முயற்சி செய்து வருகிறார்கள் என்பதும் பொய்யாகும். எதிவாதிகள் ஒன்று கூடிக்கொண்டு வாதியின் அனுபோகத்தை இடையூறு செய்ய 25.10.2010 முதல் முயற்சி செய்து வருவதாக கூறுவலும் கற்பனையான செய்தியாகும். வழக்கு மூலமும் கிடையாது. வழக்கு சொத்துகளை வாதி அனுபோகம் செய்து வருவதாக கூறுவதும் பொய்யாகும். வழக்கு சொத்துக்களில் முதல் அயிட்ட சொத்தான 459 /1C2 க்கு கிழக்கே உள்ள புல எண் 459 / SA 24-01-2007 ல் 12 பிரதிவாதிகள் குடும்பத்தார் பூங்கொடி வகையறாவிடமிருந்து சுத்த கிரயத்திற்கு சட்டப்படி வாங்கிய சொத்தாகும். கிரய காலம் முதல் உடன் அடைந்து ஆண்டு அனுபவித்து வந்து அரசும் அதை ஏற்றுக் கொண்டு பட்டா வழங்கி உள்ளது.

6. மேற்படி நிலத்தில் புன்செய் பயிர் செய்து அனுபவித்து வருகிறார். இந்த நிலத்திற்கு மேற்கிலுள்ள 459/1C2 மற்றும் வடக்கிலுள்ள 459/1B3A ஆகிய நிலங்களை 1,2 பிரதிவாதிகள் மற்றும் முன்னோர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்து வந்தனர். 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தை ஏற்றுக் கொண்ட அரசு பட்டா வழங்கியுள்ளது. புல எண்கள் 459/6A1, 459/6B ஆகிய நிலங்கள் 25.07.1997 ஆண்டில் 1-ம் பிரதிவாதியின் தந்தையால் சிவராம ஆசாரி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற சொத்துக்களாகும். அந்த கிரைய சொத்துகளிலிருந்து போகவும் வரவும் புலஎண் 459 / 1B3A தரிசு நிலத்தை பல பண்ணிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக வழியாகவும் நிலமாகவும் பயன்படுத்தி வந்தார். அந்த வகையில் புல எண்கள் 459 / 1C2, 459 / 1B3A ஆகிய நிலங்களில் 1,2 பிரதிவாதிகளுக்கு அனுபோக பாத்தியமும் உரிமையும் உடமையும் ஏற்பட்டுள்ளது.

7. புல எண் 459/6B க்கு தெற்கிலும், கிழக்கிலும் 1,2 பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியமான நிலங்கள் கிணற்றுடன் கூடியது புல எண் 457 ல் உள்ளது அதில் மின்இணைப்பு பெற்று 5 HP மோட்டார் மூலம் புலஎண் 459/6B, 459/6A, 459/5A ஆகிய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. பூர்வீக பாத்தியமான நிலங்களிலிருந்தும் 459/1C2 மற்றும் 459/1B3A நிலங்கள் வழியாக விளைபொருள்களை வாதி கொண்டு வருகிறார். 1,2 பிரதிவாதிகள் புல எண்கள் 459/1C2, 459/1A1, 459/181, 459/1B3A, 459/6B, 459/6A1 ஆகியவற்றுக்கு “ஆ”பதிவேடும் பெற்று எல்லோருக்கும் குறிப்பாக வாதிக்கு எதிரிடையாகவும், வெளிப்படையாகவும் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். புலஎண் 459/1A1, 459/1B1 ஆகியவற்றையும் 1,2 பிரதிவாதிக்குள் அனுபவித்து வருகிறார்கள். வழக்கு 1,2 அயிட்ட சொத்துக்களுக்கு தெற்கிலும், கிழக்கிலும் பட்டா எண் 20 ல் வாதியின் கணவருக்கு பாத்தியமான நிலம் உள்ளது என்பது பொய்யாகும். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணப்படி பட்யலிலுள்ள வரிசை எண் 2 ல் உள்ள தீர்வை ரசீதுகள் வழக்கு சொத்துகளுக்கு உரியது அல்ல. வாதி தாக்கல் செய்துள்ள C119, C37, C100 1408 பசலிக்கு உரிய தீர்வை ரசீது வழக்கு சொத்துக்களுக்கு உரியது அல்ல.

8. உண்மையில் புல எண். 459/518 வடக்கே உள்ள புல எண். 459/5 என்ற சொத்தினை 1ம் எதிர்வாதி தன்னுடைய மைனர் குமாரர்கள் முத்துராமன், புகழ்கங்காதரன் ஆகியோரை மைனராக காட்ட கார்டீயன் என்ற முறையில் அனுபவித்து தீர்வைகளை செலுத்தி தன் மைனர் குமாரர்கள் முத்துராமன், புகழ்கங்காதரன் வருகிறார். அந்த கிரைய காலத்திற்கு பிறகும் எதிர்வாதி அரசுக்கு செலுத்த வேண்டிய ஆகியோரின் பெயரில் பட்டா பெற்று இந்த சொத்துக்கு அருகாமையிலுள்ள புல எண். 457/3A, 459/6A1 மற்றும் 459/68 ஆகிய சொத்துக்களை ஏற்கனவே கிரையம் பெற்றும் எதிர்வாதி குடும்பத்தினர் ஏகபோகமாக அனுபவித்து வருகின்றார்கள். 1ம் எதிர்வாதி குடும்பத்திற்கு சொந்தமான மேற்கண்ட புல எண்களில் கண்ட சொத்துக்களை

வெளிப்படையாகவும், எவ்லோருக்கும் எதிரிடையாகவும், யாருடைய இடைஞ்சலுமின்றி மரவள்ளி,கடலை,நெல்,எள் ஆகியன பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள். மேற்படி சொத்துக்களில் 1 ம் எதிர்வாதி குடும்பத்தினரை தவிர வேறு எவருக்கும் உரிமையும், அனுபவமோ கிடையாது. மேலும் புல எண், 459/5A கிரைய சொத்திற்கும் வடக்கே உள்ள புல எண்கள். 459/1B3A என்ற தரிசு நிலம் பட்டா பெற்று 1 ம் எதிர்வாதியின் அனுபவத்திலேயே இருந்து வருகிறது. 1 ம் எதிர்வாதியின் புல எண். 459/5A வழியாக தான் தங்களுக்கு பாத்தியமான புல எண்கள், 457/3A, 459/6A1, 459/6B ஆகிய நிலங்களுக்கு அறுவடை காலத்திலும் சாதாரண நாட்களிலும் வந்து போக முடியும். இதற்கு தரிசு நில எண்கள். 459/1B3A மற்றும் 459/1C2 ன் வழியாகத்தான் சர்வே எண். 459/5A க்கு சென்றடைய முடியும், என்ற நிலம் கிரையம் பெறப்பட்டது1 ம் எதிர்வாதிக்கு சொந்தமான அனைத்து நிலங்களுக்கும் சென்று வர இந்த தரிசு நிலங்களை தவிர வேறு வழி கிடையாது. இந்த காரணத்திற்காகத்தான் புலஎண் 459/5A, என்ற நிலம் கிரயம் பெறப்பட்டது. 1 ம் எதிர்வாதியின் குடும்ப அனுபவத்தில் தான் சர்வே எண்கள். 459/1B3A, 459/1C2 ஆகிய பட்டா நிலங்கள் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் புல எண்கள். 459/1C2, 459/1B3A, ஆகிய தரிசு நிலங்கள் வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாக கூறுவது சுத்த பொய்யாகும்.

9. ஒரு சண்முகம் பிள்ளை பூங்கொடி வகையறாவிடம் புல எண். 459/5A நிலத்தை வாதி கிரையம் கேட்டு அதற்கு மறுத்து 1 ம் எதிர்வாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டது. இதில் கோபமடைந்த வாதி பூங்கொடி வகையறாவிடம் கோபம் காட்டுவதை விடுத்து சட்டப்படி கிரையம் பெற்ற 1 ம் எதிர்வாதி குடும்பத்தோடு கடுமையான கோபத்தை பாராட்டிக்கொண்டு வருவதன் விளைவே எதிர்வாதிகளுக்கு எதிரான இவ்வழக்காகும். 1 ம் எதிர்வாதி புல எண்கள் 459/5A, 459/1B3A, 459/1C2 ஆகியவற்றில் மரவள்ளி, கம்பு, சோளம் ஆகியவற்றை திருத்தி செப்பனிட்டு மரவள்ளி, கம்பு, சோளம் ஆகியன பயிரிட்டு அனுபவித்து வருகிறார்.

10. புல எண். 459/5A. ன் கிரைய காலத்திற்கு முன்பே புல எண். 459/6A1. வழியாக தான் 1ம் எதிர்வாதி வெளியே சென்று வந்தார். கூடுதலான வசதி தேவைப்பட்டதால் அதன் அருகாமையிலுள்ள புல எண். 459/5A, 1ம் எதிர்வாதியால் கிரையம் பெறப்பட்டது. 1ம் எதிர்வாதியின் குடும்ப வளர்ச்சியை பொருத்துகொள்ள முடியாமல் ஏதோ 1ம் எதிர்வாதி வாதியை தடுக்க முற்பட்டதாகவும் கூறி இந்த வழக்கு அவரால் வேண்டுமென்றே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்வாதியின் அமைதியான அனுபவத்திற்கும் சட்டப்படியான உரிமைக்கும் வாதியும் அவரைச்சார்ந்த வரும் எல்லையில்லாத தொல்லையையும் துன்பத்தையும் கொடுத்து வருகின்றார்கள். சட்டப்படியான உரிமையும் அனுபோகமும் ஏதுமில்லாத வாதி வழக்கினை செலவுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டுமாய் ம் எதிர்வாதி இதர எதிர்வாதிகளுக்காகவும் கேட்டுக்கொள்கிறார். 2ம் எதிர் வாதி இந்த எதிர்வழக்குரையை அனுகரிக்கிறார். 1ம் எதிர்வாதி தேவையெனில் தன் கூடுதல் எதிர்வழக்குரையை எதிர்காலத்தில் தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக்கோள்கிறார்.

**11. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளின் அடிப்படையில் பரிசீலனை செய்து தீர்வுக்காக 01.08.2014 அன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.**

1. வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டதா?
2. வாதி கோரும் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் உண்டா?

12. சாட்சி விசாரணையின்போது வாதி தரப்பில் திருமதி.விஜயா வா.சா.1-ஆகவும், திருமதி பூங்காவனம் வா.சா.2-ஆகவும், திரு.முத்துசாமி வா.சா.3. ஆகவும், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்துள்ளார்கள். வா.சா.1- ஆனவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.2 ஆனவர் மூலம் சா.த.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. சாட்சி விசாரணையின்போது பிரதிவாதிகள் தரப்பில் திரு.கோவிந்தசாமி பி.சா.1-ஆகவும், இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்துள்ளார். பி.சா.1-ஆனவர் மூலமாக பிசா.ஆ.5 முதல் 18 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வா.சா.1 ஆனவரை குறுக்குவிசாரணை செய்ததன் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. மேலும் பி.சா.ஆ.10 ஆக குறியீடு செய்துள்ளதில் கோவிந்தசாமியின் மனைவி பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் எண்ணிக்கை- 10 என்றும் மற்றும் பி.சா.ஆ.11 ஆக குறியீடு செய்துள்ள கோவிந்தசாமிக்கு கிரையம் கொடுத்த பூங்கொடி அம்மாள் தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீதுகள் கோர்வை என்றும் பி.சா.ஆ.12 ஆக குறியீடு செய்துள்ளதில் கோவிந்தசாமி மகன் முத்துராமன் பெயரில் செலுத்திய தீர்வை ரசீது புல எண்.456/5 ஏ வழங்கபட்ட கணினி சிட்டா என்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்கண்டவைகளைப் பொருத்து பிரதிவாதியின் ஆணையுறுதிப்பத்திரத்தினை பரிசீலிக்கையில் பி.சா..ஆ.10-ஆனதில் கோவிந்தசாமியின் மனைவி பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் எண்ணிக்கை 1 எனவும், பி.சா.ஆ.11-ஆனதில் கோவிந்தசாமிக்கு கிரையம் கொடுத்த பூங்கொடி அம்மாள் தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீதுகள் கோர்வை-10 எனவும். பி.சா.ஆ.12-ஆனதில் கோவிந்தசாமி மகன் முத்துராமன் பெயரில் செலுத்திய திர்வை ரசீது என்றே உள்ளது. மேற்படி ஆணையுறுதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் ஒத்துப்போவதால் மேற்படி சாட்சியத்தில் உள்ளவைகள் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ள பிழைகள் என்றும் தெரியவருகிறது. ஆகவே பி.சா.ஆ.10-என்பது கோவிந்தசாமி மனைவி பெயரில் உள்ள 1 தீர்வை ரசீது என்பதும், பி.சா.ஆ.11-என்பது கோவிந்தசாமிக்கு கிரையம் கொடுத்த பூங்கொடி அம்மாள் தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீதுகள் கோர்வை-10 என்பதும்,

பி.சா.ஆ.12 என்பது கோவிந்தசாமி மகன் முத்துராமன் பெயரில் செலுத்திய தீர்வை ரசீது மட்டுமே என்பதும் தெரியவருகிறது.

15. **சொத்து விபரம்**

1. திட்டக்குடி தாலுக்கா, மங்களூர் கிராமத்தில் உள்ள தரிக சர்வே எண்.459/1C2-ல் 0.25.0 ஏர்ஸ்

2. திட்டக்குடி தாலுக்கா, மங்களூர் கிராமத்தில் உள்ள தரிசு சர்வே எண். 459/1 பி3 ல் 0.13.0 ஏர்ஸ்

**16. இந்நிலையில் இவ்வழக்கு சங்கதி மற்றும் சூழ்நிலையை கருத்தில் சங்கதி இந்நிலையில் இவ்வழக்கு கொண்டு இந்நீதிமன்றமானது மேற்படி எழுவினாக்களை பின்வருமாறு மாற்றியமைக்கிறது.**

1. வாதி தாவா சொத்தில் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் அனுபவத்தில் உள்ளாரா?

2. வாதி கோரும் நிலைக்கால உறுத்துகட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3, வாதிக்கு கிடைக்கூடிய இதர பரிகாரங்கள் உண்டா?

17. மேலும் மேற்படி எழுவினாக்களை தீர்மானிக்க வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்களே போதுமானது என்றும் மறுவிசாரணை தேவையில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**மேல்முறையீட்டு மனுவின் சுருக்கம்**

18. கீழமை நீதிமன்றம் சட்டத்திற்கு புறம்பாகவும், நியாயத்திற்கு எதிராகவும், தீர்ப்புரை வழங்கியது சட்டப்படி தவறு. கீழமை நீதிமன்றம் ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாமல் எதிர்வாதிகளுக்கு அனுசரணையாக தீர்ப்பு வாதிகள் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியங்களையும், வழங்கிய சட்டப்படி தவறு. கீழமை நீதிமன்றம், வழக்கு சொத்துக்களை பொறுத்து, வாதி ஏற்கனவே திட்டக்குடி

உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ் 294/2007 என்ற வழக்கு எண்ணில் வழக்கு தாக்கல் செய்து, வாதி எதிர்வாதிகள், சம்மதத்தின் பேரிலும், வழக்கு சொத்தில் 1.2 எதிர்வாதிகள் வழக்கு சொத்தை வாதி அனுபவம் செய்வதை இடையுறு செய்வதில்லை என்று உறுதிமொழி அளித்ததின் பேரில் இந்த வழக்கு மேற்கொண்டு நடத்தாமல் பஞ்சாயத்தார்கள் சொல்படி தள்ளுபடிக்கு விடப்பட்டது என்பதை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக ஒ.எஸ்.284/2007 என்ற வழக்கு நடைப்பெறும் போதும் அதற்கு பின்னரும், தற்போது வழக்கு தாக்கல் செய்த பின்னரும், வழக்கு சொத்துக்கள் தரிசு என்ற வகைப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளது என்பதை கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்புரை வழங்கியது என்பது தவறு. கீழமை நீதிமன்றம், ஒ.எஸ் 202/2010 என்ற வழக்கு தாக்கல் செய்த பின்னர் 12 எதிர்வாதிகள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி, வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதிக்கு பட்டா பெற்றுள்ளார்கள் என்று கூறுவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்பதை கருத்தில் கொள்ளவில்லை. கீழமை நீதிமன்றம், 1, 2 எதிர்வாதிகள் வழக்கு சொத்து சம்மந்தமாக எந்த தேதியில் பட்டா உத்திரவை பெற்றார்கள். என்பதையோ, வழக்கு சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா சம்மந்தமான வட்டாட்சியர் உத்திரவையோ, சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று கூறுவது, சட்டப்படி ஏற்புடையதல்ல என்பதை சுருத்தில் கொள்ளவில்லை. கீழமை நீதிமன்றம், வழக்கு சொத்துக்களை வாதியும் அவருடைய மாமியார் செல்லபாங்கியும் மாமனார் செல்லமுத்துவும், கணவர் இளங்கோவும் ஒரு குடும்பமாக இருந்து, 50 ஆண்டுகளாக அனுபவம் செய்துள்ளார் என்பதை, கருத்தில் கொள்ளாமல், கீழமை நீதிமன்றம், வழக்கு சொத்திற்கு பக்கத்தில் உள்ள பூங்காவனம் என்ற சாட்சி வாதி தரப்பு சாட்சி 2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதை, கருத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை வழங்கியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. கீழமை நீதிமன்றம், எதிர்வாதிகள் வழக்கு சொத்துக்களை தங்கள் நிலங்களுக்கு சென்று வர பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்று கூறுவதை எண்பிக்காமல் வாய்மொழி சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளது. எண்பிக்க பட்டதாக கருத

முடியாது என்பதை கருத்தில் கொள்ளவில்லை. கீழமை நீதிமன்றம், வாதியானவர் வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள தங்களுடைய பட்டா நிலத்துடன் சேர்த்து வழக்கு சொத்தையும் சேர்த்து நாளது வரை அனுபவம் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை வழங்கியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. கீழமை நீதிமன்றம், வழக்கு சொத்திற்கான பட்டாவை பொறுத்து, எதிர்வாதிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதை குறித்து 5 முதல் 9 எதிர்வாதிகள் வழக்கில் தரப்பினர்களாக இருந்தும் அது சம்மந்தமாக எவ்வித சாட்சியங்களும் அளிக்க முன் வரவில்லை என்பதை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை வழங்கியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. கீழமை நீதிமன்றம், வழக்கு சொத்து சம்மந்தமாக 5 முதல் 9 எதிர்வாதிகள், வழக்கு சொத்துக்களில் உண்மை நிலையை குறித்து நீதிமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்காமல், ஒருதலைபட்சமாக இருந்துள்ளதை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை வழங்கியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. கீழமை நீதிமன்றம் வழக்கு சொத்துக்களை வாதி அனுபவம் செய்து வருவது சம்மந்தமாக குறியீ செய்யப்பட்ட ஆவனங்களை சரியான முறையில் கவனத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை வழங்கியுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல. மேற்படி காரணங்களால் வாதி வழக்குரையில் கூறியுள்ள படி நிலைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியிருக்க வேண்டும்.

19. **இம்மேல்முறையீட்டு வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய அம்சங்கள்** :

1. கீழமை நீதிமன்றம் ஏற்கனவே வாதி தரப்பில் அசல் வழக்கு எண்.284/2007 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் பிரதிவாதிகள் இடையூறு செய்வதில்லை என்று உறுதிமொழி அளித்ததை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

2. தாவா சொத்துக்கள் தரிசு என்ற வகைப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளது என்பதை கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

3. 1, 2 எதிர்வாதிகள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா வாங்கியுள்ளார்கள் என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லையா?

4. வாதி, அவரது கணவர், மாமனார், மாமியார் ஆகியோர் தாவா சொத்தின் அனுபவத்தில் 50 ஆண்டுகளாக இருந்துள்ளார்கள் என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

5. 5 முதல் 9 எதிர்வாதிகளை சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

6. வாதியின் அனுபவத்தை குறிப்பிடும் விதமாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

7. வாதி தரப்பு சாட்சிகளையும், ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?

8. மேல்முறையீட்டாளர் கோரியுள்ளவாறு கீழமை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா? இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்வு காணப்பட வேண்டிய அம்சம் 1 :**

***கீழமை நீதிமன்றம் ஏற்கனவே வாதி தரப்பில் அசல் வழக்கு எண்.284/2007 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் பிரதிவாதிகள் இடையூறு செய்வதில்லை என்று உறுதிமொழி அளித்ததை கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளதா?***

20. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக கீழமை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது அவரது குறுக்கு விசாரணையில்,

**உங்களுடைய முன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும் உங்களுடைய அனுபவத்தை காட்டுதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் இதே நீதிமன்றத்தில் இதே சொத்திற்கு அசல் வழக்கு எண்.284/2007 என்ற எண்ணில் வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கோ அதில் தீர்வோ எதிர்வழக்குரை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்**

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

21. அது போலவே, பிரதிவாதி கீழமை நீதிமன்றத்தில் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட போது அவரது குறுக்கு விசாரணையில்,

**விஜயா ஏற்கனவே உங்கள் பெயரில் வழக்கு போட்டுள்ளார் என்றால் அவரது கணவர் போட்டுள்ளார். ஏற்கனவே போட்ட அசல் வழக்கு எண்.284/2007 என்றால் சரிதான். அந்த வழக்கின் சொத்து விவரமும், இந்த வழக்கின் சொத்து விவரமும் ஒன்று என்றால் ஆமாம். பழைய வழக்கில் அசல் வழக்கு எண்.284/2007-ல் பஞ்சாயத்து பேசி வழக்குச் சொத்தை தடை செய்ய மாட்டேன் என்று பேசியதால் வழக்கை வாபஸ் பெற்றேன் என்றால் இல்லை**

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

22. மேற்கண்ட இருதரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் தாவா வழக்கை கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்து சம்மந்தமாக வாதி தரப்பில் ஏற்கனவே அசல் வழக்கு எண்.284/2007 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால், இருதரப்பிலும் பஞ்சாயத்து பேசப்பட்டு இனிமேல் இடையூறு செய்ய மாட்டோம் என்று பிரதிவாதிகள் தெரிவித்ததால் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டதாக வாதி தெரிவித்துள்ள சங்கதிகள் பிரதிவாதி தரப்பில மறுக்கப்பட்டுள்ளது. எனவே, எத்தகைய சூழ்நிலையில் வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்பது நிரூபிக்க வேண்டிய கடமை வாதிக்கே உள்ளது.

23. மேற்கண்ட சங்கதிகள் குறித்து கீழமை நீதிமன்ற தீர்ப்புரையில் பாரா 11.3-ல் அசல் வழக்கு எண்.284/2007-ல் பிராதில் ஆதியில் முந்தைய உரிமையாளர் செல்லமுத்து போலவே வாதி அனுபவித்ததாகவும் வாதி தரப்பில் பி.வா.சா.ஆ..4 ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் வாதியின் கணவர் 20 ஆண்டுகளாக அனுபவத்தில் இருப்பதாகவும் மூன்று முரண்பட்ட சங்கதிகளை வாதி கூறியதாக தெரிவித்து அசல் வழக்கு எண்.284/2007-ல் வழக்குரை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், வழக்கிடை மனுக்கள் பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆகவும் இளங்கோவன் தாக்கல் செய்த முன்னெச்சரிக்கை மனு பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று கீழமை நீதிமன்ற தீர்ப்புரை மேற்கண்ட சங்கதிகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் கீழமை நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட அவல் வழக்கு எண்.284/2007 வழக்கில் வழக்குரையோ வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும், அசல் வழக்கு எண்.284/2007 வழக்கில் வழக்குரை மற்றும் இதர மனுக்கள் குறித்த ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

24. மேலும் கீழமை நீதிமன்ற தீர்ப்புரை பத்தி 11.7-ல்

பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கானது அசல் வழக்கு எண்.284/2007 வழக்கில் முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் தடைப்பட்டுள்ளதாக வாதிட்டு இருப்பினும் எதிர்வழக்குரையில் முன்தீர்ப்பு தடை குறித்து கோரவில்லை. மேலும் மேற்படி வழக்கானது விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தீர்ப்பு வழங்கப்படவில்லை என்பது சாட்சிகளின் மூலம் தெரிய வருகிறது. மேற்படி தீர்ப்பின் நகலை பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. ஒரு வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டால் அந்த தீர்ப்பாணையானது முன்தீர்ப்பு தடை கோட்பாட்டிற்கு உட்பட்டதல்ல என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சங்கதியாகும் என்று கீழமை நீதிமன்றத் தீர்ப்புரையில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

25. இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் அசல் வழக்கு 284/2007 என்ற வழக்கில் 1,2 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வதில்லை என்று உறுதிமொழி அளித்துள்ளதாக வாதிடப்பட்டுள்ளதன் நிலையில் அவ்வாறு 1, 2 பிரதிவாதிகள் உறுதிமொழி அளித்துள்ளார்களா? இல்லையா? என்பதை நிரூபிக்க வேண்டிய கடமை இந்த மேல்முறையீட்டாளருக்கே உள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஏற்கனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.284/2007 வழக்கில் அரசு தரப்பினரை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாலும் வாதிக்கு விவசாய கடன் பெறுவதற்காக அசல் பத்திரம் தேவைப்பட்டதாலும் அசல் வழக்கு எண்.284/2007 வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் கீழமை நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.284/2007 வழக்கிற்கான எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையில் அந்த ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும் பிரதிவாதிகள் தரப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளவாறு வாதி தன்னுடைய வசதிக்காகவும், தேவைக்காகவும் மட்டுமே அசல் வழக்கு எண்.284/2007 வழக்கினை தள்ளுபடியாக விட்டுள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. பிரதிவாதிகள் உறுதிமொழி அளித்துள்ளதாக வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும் அவ்வாறு உறுதிமொழி எதுவும் அளிக்கப்படவில்லை என்று பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ள நிலையிலும் மேற்கண்ட சங்கதிகள் மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே தீர்மானிக்கப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட அம்சத்திற்கு தீர்வு காணப்படுகிறது.

**தாவா சொத்துக்கள் தரிசு என்ற வகைப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளது என்பதை கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?**

26. வாதி கீழமை நீதிமன்றத்தில் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட போது,

**பூங்கொடியிடம் கிரையம் பெற்ற இடத்தில் தண்ணீர் பாசனம் இல்லாததால் பயிர் சாகுபடி செய்து வந்தார்கள். 459/1 சி2 வடக்கில் 459/1 பி3 உள்ளது என்றால் சரிதான். 459/1 பி3 ஏ 1 பிரதிவாதிகளின் பூர்வீக இடம் என்றால் வாங்கிய இடம். அந்த நிலங்களுக்கு சொட்டு நீர் பாசனம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த இடங்களுக்கு 1 ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 457 ல் மின் இணைப்பு கிணறு உள்ளது என்றால் சரிதான். அதிலிருந்து அனைத்து பகுதிகளுக்கு நீர் பாசனம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 459/1 சி2, 459/1 ஏ 1, 459/1 பி1, 459/1 பி3 ஆகியவற்றிற்கு அடங்கல் 1 ம் பிரதிவாதி குடும்பத்தின் பேரில் உள்ளது என்றால் சரிதான்.**

என்று சாட்சியம் அளித்துள்ளதன் அடிப்படையில் தாவா சொத்திற்கான அடங்கல் 1 ம் பிரதிவாதியின் குடும்பத்தின் பேரில் உள்ளது என்பதும் அந்த நிலங்கள் மின் இணைப்பு கிணறு அடிப்படையில் நீர் பாசனம் செய்யப்பட்டும் சொட்டு நீர்பாசனம் செய்யப்பட்டும் விவசாயம் செய்து வருவதும் வாதியின் குறுக்கு விசாரணையின் அடிப்படையிலேயே தெளிவாக தெரிகிறது.

27. அதனைப் பொருத்து கீழமை நீதிமன்ற தீர்ப்புரையில் பத்தி 11.10 ல்

**புல எண்.459/1 பி3 1 ம் பிரதிவாதியின் பூர்வீக இடம் என்றால் பிரதிவாதி வாங்கிய இடம். மேற்கண்ட இடங்களுக்க சொட்டு நீர் பாசனம் செய்து வருகிறார் என்றால் சரிதான்**

என்று பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

28. மேலும் கீழமை நீதிமன்றம் தீர்ப்புரையில் பத்தி 11.17 ல் கோவிந்தசாமியின் தாயார் மற்றும் கோவிந்தசாமியின் பெயரில் வழங்கப்பட்ட புல எண்.457/3 ஏ, 459/6 ஏ 1, 459/6 பி ஆகியவற்றிற்கான கணினி சிட்டா பி.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கோவிந்தசாமி சொட்டு நீர் பாசனத்திற்காக தாயார் பெயரில் அமைந்த இன்வாய்ஸ் நகல்கள் பி.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தந்தையார் செங்கமலை சிவராம ஆசாரியிடமிருந்து கிரையம்

பெற்று அதிலிருந்து போக, வர புல எண்.459/1 பி3 தரிசு நிலத்தை பயன்படுத்துவதாக கூறியுள்ளார் என்று கீழமை நீதிமன்ற தீர்ப்புரையில் மேற்கண்ட சங்கதிகள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் தரிசு நிலமாக இருந்து அது பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வந்துள்ளதையும் கீழமை நீதிமன்றம் பரிசீலனை செய்துள்ளது தெளிவாக தெரிகிறது.

29. எனவே மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளவாறு தாவா சொத்து தரிசு நிலமாக இருந்ததா? இல்லையா? என்பது பற்றி கீழமை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டதாக வாதிடப்பட்ட சங்கதிகள் சரியல்ல என்று தீர்மானித்து அதனடிப்படையில் மேற்கண்ட அம்சத்திற்கு விடை காணப்படுகிறது.

**1, 2 பிரதிவாதிகள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா வாங்கியுள்ளார்கள் என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லையா?**

30. 1 ம் பிரதிவாதி கீழமை நீதிமன்றத்தில் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட போது அவரது குறுக்கு விசாரணையில்,

**வழக்குச் சொத்திற்கு பட்டா வாங்கினீர்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அது எந்த இடத்திற்கு என்றால் 1 பி3 ஏ, 1 சி2 என்பது பட்டா வாங்கும் போது 1 சி2 வாக மாறிவிட்டது. சிட்டா என்பதை கணினியில் உங்கள் செல்வாக்கை பயன்படுத்தி திருத்திவிட்டீர்கள் என்றால் சரியல்ல. 6 ஏ 1 என்பது நீங்கள் கிரையம் வாங்கியதா என்றால் சரிதான். 6 ஏ 1 வழியாக தான் உங்கள் நிலம் பட்டா நிலத்திற்கு சென்று வருகிறோம் என்றால் ஆமாம். உங்கள் மனைவி பெயரில் உங்கள் செல்வாக்கை பயன்படுத்தி 1 பி1, 1 எ 1 ஆகியவற்றிற்கு பட்டா வாங்கியுள்ளீர்கள் என்றால் செல்வாக்கு இல்லை. பட்டா வாங்கியுள்ளேன்.**

என்று சாட்சியம் அளித்துள்ளார். இதனைப் பொருத்து வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

**வழக்குச் சொத்துக்களில் தரிசு நிலங்கள் என்று சொல்லியிருந்த போதிலும் 1 ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்**

என்று 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவை ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

31. இதனைப் பொருத்து கீழமை நீதிமன்ற தீர்ப்புரையில் பத்தி 11.19 ல்

இந்த நிலத்திற்கு மேற்கில் உள்ள 459/1 சி2 மற்றும் வடக்கில் உள்ள 459/1 பி3 ஏ ஆகிய நிலங்களை 1, 2 பிரதிவாதிகளின் முன்னோர்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வந்ததை ஏற்றுக் கொண்டு அரசும் பட்டா வழங்கியுள்ளது என்று கூறி மேற்படி பட்டா பி.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 16.04.2015 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட புல எண்.459 க்கு உட்பிரிவுகளுக்கான “அ” பதிவேடு சான்றிட்ட நகல் பி.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் வழக்கு புல எண்.459/1 சி2 ஏ, 459/1 பி3 ஏ கொளஞ்சி என்பவரது பெயரில் பட்டா எண்.1827 அனுபோகத்தில் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்று பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் பட்டாவானது 1ம் பிரதிவாதியின் செல்வாக்கை பயன்படுத்தி வாங்கப்பட்டதாக தெரிவித்துள்ள நிலையில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள வாதிக்கே அந்த சங்கதியை நிரூபிக்க வேண்டிய கடமை உள்ளது. ஆனால் அசல் வழக்கில் அரசு தரப்பினர்களை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் மேற்கண்ட சங்கதிகளை ஏன் நிரூபிக்கவில்லை என்பதை வாதி தெரிவிக்க தவறிவிட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

32. எனவே 1, 2 பிரதிவாதிகள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி வழக்குச் சொத்தின் ஒரு பகுதிக்கு பட்டா பெற்றுள்ளதாக மேல்முறையீட்டாளர் தரப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை பொருத்து கீழமை நீதிமன்றத்தில் சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் வாதி நிரூபிக்க தவறிவிட்டாகவே தீர்மானித்து அதனடிப்படையில் மேற்கண்ட அம்சத்திற்கு விடை காணப்படுகிறது.

**வாதி அவரது கணவர், மாமனார், மாமியார் ஆகியோர் தாவா சொத்தின் அனுபவத்தில் 50 ஆண்டுகளாக இருந்துள்ளார்கள் என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கி உள்ளதா?**

33. வா.சா.1 கீழமை நீதிமன்றத்தில் அவரது குறுக்கு விசாரணையில்,

**உங்களுடைய முன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பின்னரும் உங்களுடைய அனுபவத்தை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்**

என்று சாட்சியம் அளித்திருந்தாலும் கூட வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தை காட்டுவதன் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது.

34. அதனைப் பொருத்து கீழமை நீதிமன்ற தீர்ப்புரையில் பத்தி 11.9 ல்

மேற்படி பட்டா எண்.90 ஆனது இவ்வழக்கு சொத்திற்கானது இல்லை என்று தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 தீர்வை ரசீது கோர்வை (5) பரிசீலனை செய்த வகையில் அவைகள் வழக்குச் சொத்திற்கானது என்று வாதி தெளிவுப்படுத்தவில்லை என்றும்

35. அதன் பின்னர் தீர்ப்புரை பத்தி 11.20 ல்

வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிலைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியுள்ள நிலையில் தனது அனுபவத்தை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதி சட்டப்படியான அனுபவத்தில் இருப்பதை நிரூபிக்காததால் இவ்வெழுவினா வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது என்று பரிசீலனை செய்ததன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் 50 ஆண்டு காலமாக வாதி மற்றும் அவரது கணவர் முன்னோர்கள் அனுபவத்தில் இருப்பதாக வழக்குரையிலும் இந்த மேல்முறையீட்டிலும் சொல்லியிருந்தாலும் கூட அவர்களது அனுபவத்தை நிரூபிக்கும் வகையில் கீழமை

நீதிமன்றத்தில் வாதி தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது என்று தீர்மானித்து அதனடிப்படையில் மேற்கண்ட அம்சத்திற்கு விடை காணப்படுகிறது.

**5 முதல் 9 எதிர்வாதிகளை சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை என்பதை கீழமை நீதிமன்றம் கருத்தில் கொள்ளாமல் தீர்ப்பு வழங்கியுள்ளதா?**

36. மேல்முறையீட்டாளர் தரப்பில் கீழமை நீதிமன்றத்தில் வழக்குச் சொத்திற்கான பட்டா எதிர்வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதை குறித்து 5 முதல் 9 எதிர்வாதிகளை சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை என்று வாதிடப்பட்டது. 1, 2 எதிர்வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கீழமை நீதிமன்ற எதிர்வழக்குரையில் ஏற்கனவே வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.284/2007 வழக்கில் அரசு தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் தான் வழக்கை வாதி வாபஸ் பெற்றுக் கொண்டு புதிதாக அசல் வழக்கு எண்.202/2010 ஐ தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.284/2007 வழக்கில் வழக்குரை வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படாத நிலையில் அதனை பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்குரையை பரிசீலனை செய்த வகையில் அதில் அரசு தரப்பினர் சேர்க்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. ஆனால் அதன் பின்னர் அசல் வழக்கு எண்.202/2010 வழக்கில் அரசு தரப்பினர்களை வாதி சேர்த்துள்ள நிலையிலும் அவர்களை ஏன் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை என்பது குறிதது மேல்முறையீட்டாளர் தரப்பில் எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. 1, 2 எதிர்வாதிகளுக்கு பட்டா வழங்கியுள்ளதை வாதி ஆட்சேபணை செய்யும் நிலையில் அரசு தரப்பினர்களுக்கு அழைப்பாணை அனுப்பி நீதிமன்றத்திற்கு அவர்களை வரவழைத்து பட்டா குறித்த சங்கதிகளை அவர்களின் சாட்சியத்தின் மூலமாக நீதிமன்றத்திற்கு தெளிவுப்படுத்தியிருக்க வேண்டியது மேல்முறையீட்டாளர்/வாதியின் கடமையாகும். ஆனால், அவ்வாறு கீழமை நீதிமன்றத்தில் இம்மேல்முறையீட்டாளர்

அரசு தரப்பினரை சாட்சிகளாக விசாரணை செய்யாமல் அவர்களை பிரதிவாதி தரப்பில் சாட்சிகளாக விசாரணை செய்திருக்க வேண்டுமென தற்சமயம் வாதிடுவது ஏற்கத்தக்கதாக இல்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் மேற்கண்ட அம்சத்திற்கு விடை காணப்படுகிறது.

**வாதியின் அனுபவத்தை குறிப்பிடும் விதமாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?**

**மற்றும்**

**வாதிகள் தரப்பு சாட்சிகளையும், ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாமல் கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதா?**

37. வாதி தரப்பில் வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

**நீங்கள் போட்ட வா.சா.ஆ.3, 5, 6 கிரையப் பத்திரங்கள் எதற்காக போட்டுள்ளதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சொல்லவில்லை. நீங்கள் வழக்கில் தெரிவிக்காத சங்கதிகளை குறித்து ஆவணங்களை குறியீடு செய்ய தடைபட்டு உள்ளீர்கள் என்றால் தெரியாது. இந்த 3 ஆவணங்களிலும் வழக்குச் சொத்து எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்களுக்கு பட்டா எண்.90 கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 1 ஆகியவைகள் பட்டா எண்.90 க்கானது என்றால் சரிதான்**

என்று சாட்சியம் அளித்துள்ளதன் அடிப்படையில் வாதி தரப்பில் வழக்குச் சொத்திற்கான எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது.

38. இதனைப் பொருத்து கீழமை நீதிமன்றத்தில் பத்தி 11.8 ல்
வா.சா.ஆ.1 ஆன தீர்வை ரசீது கோர்வை 5 பரிசீலிக்கையில் அவைகள் படடா எண்90 க்கானது என்பது தெரிய வருகிறது. பட்டா எண்.90 இவ்வழக்கு சொத்திற்கானது இல்லை என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 இவ்வழக்கு

சொத்திற்கானவை என்பதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் வாதி தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று பரிசீலனை செய்த போது தெரிய வருகிறது.

39. வாதி தரப்பில் சாட்சியளித்துள்ள வா.சா.2 அவரது குறுக்கு விசாரணையில்

**459/5 ஏ கிழக்கில் பூங்கொடிக்கு பாத்தியமான சொத்து இருந்ததா என்றால் இருந்தது. பூங்கொடியிடமிருந்து கோவிந்தசாமி வகையறா கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான. 459/6 ஏ 1, 459/6 பி1 சிவசாமி ஆசாரிக்கு சொத்து இருந்ததா என்றால் இருந்தது. அதை கோவிந்தசாமி கிரையம் வாங்கினார் என்றால் தெரியும். அங்கு சொட்டு நீர் பாசன வசதி பாய்ந்து வருகிறதா என்றால் பாய்ந்து வருகிறது. ஏன் காட்டுக்கு ஓரமாக பிரதிவாதி 24 செண்ட் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்**

என்று சாட்சியம் அளித்துள்ளார்.

40. அதுபோலவே வா.சா.3 அவரது குறுக்கு விசாரணையில்

**பூங்கொடியிடமிருந்து கோவிந்தசாமி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பூங்கொடியிடமிருந்து கிரையம் வாங்கியதற்கு பட்டா வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 459/7 ல் மோட்டார் உள்ளதா என்றால் உள்ளது. 459/6 பி தெற்கிலும், கிழக்கிலும் எதிர்வாதிக்கு பூர்வீக நிலம் உள்ளது என்றால் சரிதான்**

**என்று சாட்சியம் அளித்துள்ளார்.**

41. மேற்கண்ட சாட்சியங்கள் குறித்து கீழமை நீதிமன்றத்தில் பத்தி 11.11 ல்

வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில்

விஜயா எந்த வகையான சொத்திற்கு வழக்குப் போட்டுள்ளார் என்றால் தெரியாது எனக்கூறியுள்ள நிலையில் இவரது சாட்சியம் வாதி வழக்கிற்கு ஒத்துப்போகும் வகையில் அமையவில்லை.வா.சா.2 ஆனவர் வழக்குச் சொத்தில் வாதி அனுபவத்தில் இருப்பதாக கூறியிருப்பினும் மேற்படி அனுபவத்தை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல்

செய்யப்படவில்லை என்று பரிசீலனை செய்துள்ளது தெரிய வருகிறது. மேலும் மேற்கண்ட வா.சா.2, 3 சாட்சிகளானது வாதி தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை என்பதும் தாவா சொத்திற்கு அருகில் உள்ள எதிர்வாதியின் அனுபவத்தினை நிரூபிக்கும் வகையிலேயே அமைந்தள்ளது தெளிவாக தெரிய வருகிறது என்று தீர்மானித்து மேற்கண்ட அம்சத்திற்கு விடை காணப்படுகிறது.

**மேல்முறையீட்டாளர் கோரியுள்ளவாறு கீழமை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா? இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?**

42. இருதரப்பு ஆவணங்கள், சாட்சியங்கள் மற்றும இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்/வாதியின் வழக்கு விவரங்களை சரியாகவே பரிசீலனை செய்துள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் எவ்வித இடையூறும் செய்யவோ, மாற்றி அமைக்கவோ இயலாது என்றும் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்வதே நீதியின் பாற்பட்டதாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

43. முடிவாக, இம்மேல்முறையீடு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு, திட்டக்குடி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் கடந்த 29.02.2024-ம் தேதி அசல் வழக்கு எண்.202/2010 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை உறுதி செய்து தீர்ப்பளிக்கிறது,

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜீலை திங்கள் 28-ம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

VISWANATH Digitally signed by VISWANATH Date: 2026.07.28 18:41:34 +0530

சார்பு நீதிபதி,

திட்டக்குடி.

மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

VISWANATH Digitally signed by VISWANATH Date: 2026.07.28 18:41:44 +0530

சார்பு நீதிபதி,

திட்டக்குடி.

**Copy to:**

The Additional District Munsif,
Additional District Munsif Court,
Thitagudi